١٠٠ سنة ثابتة ـ تاميلي

# 100
# நபிவழிகள்

(135)

جاليات

شعبة توعية الجاليات بالزلفي

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠٦ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠٦ ص.ب: ١٨٢

# مائة سنة ثابتة

أعده وترجمه إلـــى اللغة التاميلية:

## شعبة توعية الجاليات في الزلفي

الطبعة الأولى: ٦/١٤٢٦ هـــ.

ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢٥هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

شعبة توعية الجاليات بالزلفي
مائة سنة ثابتة – الزلفي ، ١٤٢٥ هـ
٤٤ ص؛ ١٢ × ١٧ سم
ردمك : ١-٥٦- ٨٦٤-٩٩٦٠
(النص باللغة التاميلية )
١ -الأدعية والأوراد أ. العنوان
ديوي ٢١٢,٩٣ ١٤٢٥/٧٢٤

رقم الإيداع : ١٤٢٥/٧٢٤

ردمك : ١-٥٦ – ٨٦٤-٩٩٦٠

الصف والإخراج: **شعبة توعية الجاليات في الزلفي**

# ١٠٠ سنة ثابتة

## 100 நபிவழிகள்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அல்லாஹ் கூறுவதாக கூறினார்கள்: “என்னுடைய நேசரை யார் பகைத்துக் கொள்கிறாரோ அவருடன் நான் போர்ப் பிரகடனம் செய்கிறேன். என்னுடைய அடியான், நான் அவனுக்கு கடமையாக்கியிருப்பவற்றை விட எனக்கு விருப்பமான ஒன்றின் மூலம் என்னை நெருங்கிவிட முடியாது. உபரியான வணக்கங்கள் மூலம் என்னுடைய அடியான் என்னை நெருங்கிக்கொண்டே இருப்பான் நான் அவனை நேசிக்கும் வரை. நான் அவனை நேசித்து விட்டால் அவன் செவியேற்கின்ற செவியாகவும் அவன் பார்க்கின்ற பார்வையாகவும் அவன் பிடிக்கின்ற கையாகயவும் அவன் நடக்கின்ற காலாகவும் நான் ஆகிவிடுவேன். பிறகு அவன் என்னிடம் கேட்டால் நான் கொடுத்துவிடுவேன். என்னிடம் பாதுகாவல் தேடினால் நான் அவனுக்கு பாதுகாப்பு வழங்கிடுவேன். மு..மினுடைய உயிரைக் கைப்பற்றும் விஷயத்தில் நான் தயங்கியதைப் போன்று நான் செய்கின்ற வேறு எந்தக் காரியத்திலும் நான் தயங்கிய தில்லை. (ஏனெனில்) என் அடியான் மரணத்தை வெறுக்கின்றான். நானோ அவனுக்கு தீங்கிழைப்பதை வெறுக்கின்றேன்.” அ: அபூஹுரைரா (ரலி), (புகாரி-2502)

## உறங்குவதன் ஒழுக்கங்கள்

**1. உளூச் செய்து விட்டு உறங்குதல்:** "நீ படுக்கைக்குச் சென்றால் தொழுகைக்கு உளூச் செய்வதுபோல் உளூச் செய்துகொள். பிறகு வலது புறமாகப் படுத்துக்கொள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: பராஉ பின் ஆஸிப் (ரலி), புகாரி-247, முஸ்லிம்-2710

**2. உறங்கும் முன் குல் ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல்அவூது பிரப்பிந் நாஸ் ஆகிய ஸூராக்களை ஓதுதல்:** "ஒவ்வொரு இரவும் நபி (ஸல்) அவர்கள் படுக்கச் சென்றால் இரண்டு கைகளையும் சேர்த்து அதில் ஊதி விட்டு குல் ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல்அவூது பிரப்பிந் நாஸ் ஆகியவற்றை ஓதி, இரண்டு கைகளால் முதலில் தலை யிலும் பிறகு உடம்பின் மேற்பகுதியிலும் என ஆரம்பித்து தமது உடம்பில் இயன்ற அளவு தடவுவார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்." அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: புகாரி-5018

**3. தூங்கும்போது தஸபீஹ் செய்தல்:** பாத்திமா (ரலி), அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு பணியாளை வேண்டியபோது, நபி(ஸல்)அவர்கள் "பணியாளை விடவும் சிறந்ததை நான் உங்கள் இருவருக்கும் அறிவிக்கட்டுமா? நீங்கள் படுக்கச் சென்றால் அல்லாஹு அக்பர் 33 தடவை, சுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்து லில்லாஹ் 33

தடவை சொல்லுங்கள். இது உங்களுக்கு பணியாளை விடச் சிறந்தது." என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அலீ (ரலி), நூல்: புகாரி-6318, முஸ்லிம்-2727

(**பொருள்:** அல்லாஹு அக்பர்- அல்லாஹ் மிகப் பெரியவன்! சுப்ஹானல்லாஹ்- அல்லாஹ்வைத் தூயவன் எனத் துதிக்கிறேன். அல்ஹம்து லில்லாஹ்- எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!)

**4. தூக்கத்தின் இடையில் விழித்து விட்டால் துஆ செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் இரவில் விழித்து '**லாயிலாக இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வகு அலா குல்லி ஷையின் கதீர். அல்ஹம்து லில்லாஹி வசுப்ஹானல்லாஹி வல்லாஹு அக்பர் வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்**' என்று கூறி 'இறைவா என்னை மன்னித்துவிடு' என்றோ அல்லது வேறு பிரார்த் தனைகளையோ செய்தால் அவை அங்கீகரிக்கப்படும். உளுச் செய்து தொழுதால் அத்தொழுகை ஒப்புக் கொள்ளப்படும்." அறிவிப்பவர்: உப்பாதா பின் ஸாமித் (ரலி), நூல்: புகாரி-1154

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

اَلْحَمْدُ لِلَّهِ وَسُبْحَانَ اللهِ وَاللهُ أَكْبَرُ وَلاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إِلاَّ بِاللهِ

(**பொருள்:** வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. ஆட்சியும், புகழும் அவனுக்குரியன. அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ் தூயவன்! அல்லாஹ் மிகப் பெரியவன்! நாம் நன்மை செய்வதும் தீமையிலிருந்து விடுபடுவதும் அவனைக் கொண்டே.)

**5. தூங்கி விழித்ததும் ஓத வேண்டிய துஆ:** **“அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா ப.்.தமா அமாத்தனா வஇலைஹிந் நுஷூர்.”** (புகாரி-6312, முஸ்லிம்-2711)

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَمَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُوْرُ

(**பொருள்:** எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவனே நம்மை மரணம் எனும் தூக்கத்தில் ஆழ்த்திய பின் உயிர் பெற்றெழச் செய்தான். மேலும் (மறுமையில்) மீண்டும் எழுப்பப்பட்டு அவனிடமே செல்ல வேண்டியுள்ளது.)

## உளூ மற்றும் தொழுகையின் ஒழுங்குகள்

**6. வாய்க் கொப்பளித்தலையும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவதையும் ஒரே நேரத்தில் செய்தல்:** “நபி (ஸல்) அவர்கள் ஒரு கையில் தண்ணீர் அள்ளி வாய்க் கொப்பளித்து நாசிக்கும் தண்ணீர் செலுத்தினார்கள்.”

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் ஸைத் (ரலி), நூல்: முஸ்லிம்-235

**7. குளிப்பதற்கு முன் உளூச் செய்தல்:** "நபி (ஸல்) அவர்கள் கடமையான குளிப்பை நிறைவேற்றினால் முதலில் இரு கைகளையும் கழுவுவார்கள். பிறகு தொழுகைக்குச் செய்வதுபோல உளூச் செய்வார்கள். அதன் பிறகு விரல்களைத் தண்ணரில் முக்கி அதன் மூலம் தலை முடியின் அடிப்பாகத்தைக் கோதி விடுவார்கள். பிறகு கைகளால் தண்ணீரைக் கோரி தலை மீது மூன்று முறை ஊற்றுவார்கள். பின்பு உடல் முழுவதும் தண்ணீரை ஊற்றுவார்கள்." அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: புகாரி-248

**8. உளூவுக்குப் பின் திக்ரு சொல்லல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் உளூச் செய்து விட்டு அதையும் பூரணமாகச் செய்து விட்டு பிறகு **'அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு'** என்று கூறினால் அவருக்காக சொர்க்கத்தின் எட்டு வாசல்கள் திறக்கப் படுகின்றன. அவற்றில் அவர் விரும்பிய எந்த வாசல் வழியாகவும் அவர் அதில் நுழையலாம்." அறிவிப்பவர்: உமர் (ரலி), நூல்: முஸ்லிம்-234

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

(**பொருள்:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.)

**9. தண்ணீரைச் சிக்கனமாக செலவு செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் நான்கு முத்திலிருந்து ஐந்து முத்து வரை உள்ள தண்ணீரில் குளிப்பார்கள். ஒரு முத்து அளவு தண்ணீரில் உளூச் செய்வார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: புகாரி-201, முஸ்லிம்-325 (ஒரு முத்து என்பது இரண்டு கைகளையும் சேர்த்து நீரை அள்ளும் போது எவ்வளவு கொள்ளவோ அதற்குச் சொல்லப்படும்.)

**10. உளூவுக்குப் பின் இரண்டு ரக்அத்துகள் தொழுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் நான் செய்த இந்த உளூவைப் போன்று உளூச் செய்து விட்டு பிறகு தன் மனத்துடன் பேசிக்கொண்டிருக்காமல் (கற்பனையில் மூழ்காமல், மன ஓர்மையுடன்) இரண்டு ரக்அத்து தொழு கிறாரோ அவருக்கு அவர் முன்னர் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்." அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), நூல்: புகாரி-160, முஸ்லிம்-226

**11. பாங்கு சொல்லும்போது செய்ய வேண்டியது:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் பாங்கு சொல் வதைக் கேட்டால் பாங்கு சொல்பவரைப்போல் திருப்பிச் சொல்லுங்கள். பிறகு என் மீது ஸலவாத்துச்

சொல்லுங்கள். என் மீது ஸலவாத்து சொல்பவருக்கு அல்லாஹ் பத்து முறை அருள் புரிவான்..." அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி), நூல்: முஸ்லிம்-384 (**"ஹய்ய அலஸ் ஸலா, ஹய்ய அலல் ஃபலா"** என்று சொன்னால் நாம் **"லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்"** என்று சொல்ல வேண்டும். இதற்கு ஆதாரம் உள்ளது.)

**ஸலவாத்து: அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்ன ஹமீதும் மஜீத் அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம் இன்ன ஹமீதும் மஜீத்.**

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

(**பொருள்:** இறைவா! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிவாயாக. இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிந்தது போன்று. நீ புகழுக்கும் மகத்துவத்திற்கும் உரியவன். இறைவா! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்

தினர் மீதும் நீ பரகத் செய்வாயாக. இப்ராஹீம்(அலை) அவர்கள் மீதும் அவர்க ளது குடும்பத்தினர் மீதும் நீ பரகத் செய்தது போன்று. நீ புகழுக்கும் மாட்சிமைக்கும் உரியவன்.)

ஸலவாத்திற்குப் பிறகு **"அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் த.்.வதித் தாம்மதி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆத்தி முஹம்மதனில் வஸீலத வல்.்.பழீலத வப்அஸ்ஹு மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு"** என்று கூறுபவருக்கு எனது பரிந்துரை கிடைக்கும். நூல்: புகாரி-614

اَللّٰهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلَاةِ الْقَائِمَةِ آتِ مُحَمَّدَ نِالْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ مَقَامًا مَحْمُوْدَ نِالَّذِيْ وَعَدْتَّهُ

(**பொருள்:** இறைவா! இந்த முழுமையான அழைப்பு மற்றும் நிலையான தொழுகையின் இரட்சகனே! முஹம்மத் (ஸல்)அவர்களுக்குப் பிரத்தியேக நெருக்கத்தையும் சிறப்பையும் வழங்குவாயாக. மேலும் "மகாம் மஹ்மூத்" எனும் புகழுக்குரியதோர் இடத்தில் அவர்களை எழுப்புவாயாக. அவ்வாறே நீ வாக்கு றுதி அளித்துள்ளாய்.)

**12. அதிகமதிகம் பல்துலக்குதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "என் சமுதாயத்திற்குச் சிரமமாகிவிடும் என நான் கருதியிரா விட்டால் ஒவ்வொரு தொழுகைக்கும்

பல் துலக்குமாறு கட்டளையிட்டிருப்பேன்.” அறிவிப்பவர்; அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி-887, முஸ்லிம்-252

அதுபோல தூங்கி விழித்ததும், உளூ செய்யும்போதும், வாயின் வாடை மாறும்போதும், குர்ஆன் ஓதும் போதும், வீட்டினுள் நுழைந்ததும் பல்துலக்குவது சுன்னத் ஆகும்.

**13. தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு விரைந்து செல்லுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ... “தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறைவேற்றுவதில் உள்ள நன்மையை அறிவார்களானால் அதற்காக விரைந்து செல்வார்கள்.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-651, முஸ்லிம்-437

**14. பள்ளிவாசலுக்கு நடந்து செல்லுதல்:** “எதன் மூலம் அல்லாஹ் பாவங்களை அழித்து பதவிகளை உயர்த்துவானோ அக்காரியங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?” என நபி (ஸல்) கேட்டார்கள். அதற்குத் தோழர்கள் ‘அல்லாஹ்வின் தூதரே! அறிவியுங்கள் என்றனர். உடனே நபி (ஸல்) அவர்கள், “சிரமமான நேரங்களிலும் உளூவைப் பூரணமாகச் செய்வது, பள்ளிவாசல்களுக்கு அதிக தூரம் நடந்து செல்வது, ஒரு தொழுகையைத் தொழுது விட்டு மறுதொழுகையை எதிர்பார்ப்பது. இதுதான் எல்லையைப் பாதுகாப்பது, இது தான் எல்லையைப் பாதுகாப்பது” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-251

**15. தொழுகைக்காக அமைதியாகவும் அடக்கமாகவும் வருதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டால் ஓடி வராதீர்கள்; நடந்தே வாருங்கள். நிதானத்தை கடைபிடியுங்கள்; கிடைத்ததை தொழுங்கள்; தவறியதைப் பூர்த்தி செய்யுங்கள்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-908, முஸ்லிம்-602

**16. பள்ளிவாசலுக்குள் நுழையும்போதும் வெளியே வரும்போதும் துஆ ஓதுதல்:** "உங்களில் ஒருவர் பள்ளி வாசலுக்குள் நுழைந்தால் "**அல்லாஹும்ம ஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக**" (**பொருள்:** இறைவா! உன் அருள் வாயில்களை எனக்காக திறப்பாயாக!) என்றும் பள்ளியை விட்டும் வெளியேறினால் "**அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக மின் ஃபழ்லிக**" (**பொருள்:** இறைவா! உன் அருளை உன்னிடம் வேண்டுகிறேன்.) என்றும் கூறட்டும்." அறிவிப்பவர்: அபூஹுமைத் (ரலி), நூல்: முஸ்லிம்-713

اَللّٰهُمَّ افْتَحْ لِيْ أَبْوَابَ رَحْمَتِكَ – اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ

**17. தடுப்பு வைத்துத் தொழுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் தனக்கு முன்னால் ஒட்டகத்தின் மீது அமைக்கப்படும் சாய்மானத்தின் பின்பகுதியில் உள்ள குச்சி போன்றதை வைத்துக் கொண்டு தொழட்டும். அதற்கப்பால் நடந்து செல்பவர்

பற்றி அவர் பொருட்படுத்த வேண்டாம்.” அறிவிப்பவர்: தல்ஹா (ரலி), நூல்: முஸ்லிம்-499

தடுப்பு என்பது தொழுபவர் தனக்கு முன்னால் சுவர் அல்லது குச்சி அல்லது வேறு ஏதாவது ஒன்றை வைத்து தொழுவதாகும். ஒட்டகத்தின் மீது அமைக்கப்படும் சாய்மானத்தின் பின்பகுதியில் உள்ள குச்சியின் உயரம் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி முழம் ஆகும்.

**18. இரண்டு ஸஜ்தாக்களுக்கு இடையில் பாதத்தை நட்டி வைத்து அதன் மீது அமர்தல்:** இந்த முறையில் அமர்வது பற்றி நாங்கள் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் கேட்டோம். அதற்கு அவர்கள், “அது நபிவழியாகும்” என்று பதிலளித்தார்கள். ஒரு மனிதனிடம் இருக்கின்ற கடின சித்தத்திற்கு அடையாளமாக நாங்கள் அதைக் கருதுகிறோமே என்றோம். அதற்கு இப்னு அப்பாஸ் அவர்கள் என்றாலும் “அது உங்கள் நபியின் வழியாகும்” என்று (மீண்டும்) கூறினார்கள். அறிவிப்பவர்: தாவூஸ், நூல்: முஸ்லிம்-536

**19. கடைசி அத்தஹிய்யாதில் அமரும் விதம்:** நபி (ஸல்) அவர்கள் கடைசி அத்தஹிய்யாத்தில் அமர்ந்தால் இடது காலை (வலது காலின் கீழ்) வெளிப்படுத்தி வலது காலை நட்டி வைத்து இருப்பிடம் தரையில் படுமாறு அமர்வார்கள். அறிவிப்பவர்: அபூஹுமைத் (ரலி), நூல்: புகாரி-828,

**20. ஸலாம் கொடுப்பதற்கு முன் அதிகம் துஆ செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "...அத்தஹிய்யாத் ஓதி விட்டு தனக்கு விருப்பமான பிரார்த்தனையை அவர் கேட்கட்டும்." அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: புகாரி-835

**21. வழமையான சுன்னத்துகள்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமான அடியான் ஒரு நாளைக்கு பன்னிரண்டு ரக்அத் உபரியாக அல்லாஹ்வுக்காகத் தொழுதால் அவனுக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் ஒரு மாளிகையை எழுப்புவான்." அறிவிப்பவர்: உம்மு ஹபீபா (ரலி), நூல்: முஸ்லிம்-728

வழமையான சுன்னத்துகளின் ரக்அத்துகளின் விபரம்: லுஹருக்கு முன் நான்கு லுஹருக்குப் பின் இரண்டு, ம.்.க்ரிபுக்குப் பின் இரண்டு, இ'ாவுக்குப் பின் இரண்டு, சுப்ஹுுக்கு முன் இரண்டு.

**22. லுஹாத் தொழுகை:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவரது ஒவ்வொரு மூட்டுக்கும் தர்மம் உண்டு. சுப்ஹானல்லாஹ் என்று சொல்வதும் தர்மமாகும். அல்ஹம்து லில்லாஹ் என்று சொல்வதும் தர்மமாகும். லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லவதும் தர்மமாகும். அல்லாஹு அக்பர் என்று சொல்வதும் தர்மம், நன்மையை ஏவுவதும் தர்மம்,

தீமையைத் தடுப்பதும் தர்மமே. இவையனைத்திற்கும் நண்பகலில் இரண்டு ரக்அத் (லுஹா) தொழுவது போதுமானதாகும். அறிவிப்பவர்: அபூதர்(ரலி),நூல்: முஸ்லிம்-720

லுஹா தொழுவதற்குச் சிறந்த நேரம் சூரியன் உச்சியை நோக்கி உயர்ந்து கொண்டு அதன் வெப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கும் பொழுதாகும். சூரியன் உச்சிக்கு வந்துவிட்டால் அதன் நேரம் முடிவடைந்து விடும். லுஹா தொழுகை குறைந்த பட்சம் இரண்டு ரக்அத்தாகும். அதற்கு மேல் எவ்வளவு வேண்டுமானாலும் தொழலாம். அதற்கு வரையறை இல்லை.

**23. இரவுத் தொழுகை:** 'கடமையான தொழுகைக்குப் பிறகு சிறந்த தொழுகை எது?' என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டபோது, "கடமையான தொழுகைக்குப் பிறகு சிறந்த தொழுகை நடு இரவில் தொழுவதாகும்" என்று அவர்கள் பதிலளித்தார்கள்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்-1163

**24. வித்ரு தொழுகை:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "இரவில் உங்களின் கடைசித் தொழுகையாக வித்ரை ஆக்கிக்கொள்ளுங்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: புகாரி-998, முஸ்லிம்-751

**25. செருப்பு அணிந்து தொழுதல்:** செருப்பு தூய்மையாக இருந்தால் அதை அணிந்து தொழுவது கூடும். 'நபி

அவர்கள் செருப்பணிந்து கொண்டு தொழுவார்களா?' என அனஸ் (ரலி) யிடம் வினவப்பட்டபோது, அதற்கவர்கள் "ஆம்" என்றார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-386

**26. குபா பள்ளியில் தொழுதல்:** நபி (ஸல்) அவர்கள் குபா பள்ளிக்கு நடந்தும் வாகனத்திலும் வருவார்கள். மற்றொரு அறிவிப்பில் அங்கே இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள் என்று உள்ளது. அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரி-1194, முஸ்லிம்-1399

**27. நபிலான தொழுகைகளை வீட்டில் தொழுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் பள்ளிவாசலில் தொழுகையை நிறைவேற்றி விட்டால் அதில் ஒரு பங்கை தமது வீட்டிற்கும் கொடுக்கட்டும். ஏனெனில் அவரது வீட்டில் தொழுவதற்கு அல்லாஹ் நன்மையை ஏற்படுத்துகிறான். அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி), நூல்: முஸ்லிம்-778

**28. இஸ்திகாரா-நல்லதைத் தேர்வு செய்ய-தொழுதல்:** நபி (ஸல்) அவர்கள் குர்ஆனுடைய அத்தியாயங்களை எங்களுக்குக் கற்றுத் தந்ததுபோல் எல்லாக் காரியங் களிலிலும் நல்லதைத் தேர்வு செய்யும் முறையையும் கற்றுத் தந்தார்கள்... அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி), நூல்: புகாரி-1166

இஸ்திகாரா தொழுகையின் முறை: மேற்கூறப்பட்ட நபிமொழியில் வந்திருப்பதுபோல ஒருவர் இரண்டு ரக்அத் தொழுது விட்டு பின்வரும் பிரார்த்தனையைச் செய்ய வேண்டும்.

اَللَّهُمَّ إِنِّيْ أَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلاَ أَقْدِرُ وَتَعْلَمُ وَلاَ أَعْلَمُ وَأَنْتَ عَلاَّمُ الْغُيُوْبِ اَللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ خَيْرٌ لِيْ فِيْ دِيْنِي وَمَعَاشِيْ وَعَاقِبَةِ أَمْرِيْ فَاقْدُرْهُ لِيْ وَيَسِّرْهُ لِيْ ثُمَّ بَارِكْ لِيْ فِيْهِ وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ شَرٌّ لِيْ فِيْ دِيْنِي وَ مَعَاشِيْ وَعَاقِبَةِ أَمْرِيْ فَاصْرِفْهُ عَنِّيْ وَاصْرِفْنِيْ عَنْهُ وَاقْدُرْ لِيْ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِيْ بِهِ

அல்லாஹு‟ம்ம இன்னீ அஸ்தகீருக பிஇல்மிக வஅஸ்தக்திருக பிகுத்ரதிக வஅஸ்அலுக மின் ∴பழ்லிகல் அழீம், ∴பஇன்னக தக்திரு வலா அக்திரு வத∴லமு வலா அ∴லமு வஅன்த அல்லாமுல் குயூப், அல்லாஹு‟ம்ம இன்குன்த த∴லமு அன்ன ஹாதல் அம்ர கைருன்லீ ∴பீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ, ∴பக்துர்ஹு‟லீ, வயஸ்ஸிர்ஹு‟லீ, ∴ஸு‟ம்ம பாரிக்லீ ∴பீஹ், வஇன் குன்த த∴லமு அன்ன ஹாதல் அம்ர, ஷர்ருன்லீ ∴பீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ, ∴பஸ்ரி∴ப்ஹு‟ அன்னீ வஸ்ரி∴ப்னீ அன்ஹு‟ வக்துர்ஹு‟ லீ அல்கைர ஹைஸு‟ கான ஸு‟ம்ம அர்ழினீ பிஹ்

(**பொருள்:** இறவைா! உனது ஞானத்தைக் கொண்டு உன்னிடம் நல்லதை வேண்டுகிறேன். உன் ஆற்றலைக் கொண்டு ஆற்றலை வேண்டுகிறேன். மேலும் உனது மகத்தான அருளை உன்னிடம் வேண்டுகிறேன். நீ ஆற்றலுள்ளவன். எனக்கு எந்த ஆற்றலும் இல்லை. நீ நன்கறிபவன். நான் எதுவும் அறியேன். மேலும் நீ மறைவானவற்றையும் நன்கறிபவனாவாய். இறைவா! இந்தக் காரியம் எனது தீனுக்கும் எனது வாழ்க்கைக்கும் எனது விவகாரத்தின் முடிவுக்கும் நன்மையானது என நீ அறிந்தால் அதனை எனது விதியில் சேர்ப்பாயாக. மேலும் இதனை எனக்கு எளிமையாக்கித் தருவாயாக. பிறகு இதில் எனக்கு பாக்கியம் அருள்வாயாக. ஆனால் இந்தக் காரியம் எனது தீனுக்கும் எனது வாழ்க்கைக்கும் எனது விவகாரத்தின் முடிவுக்கும் தீமையானது என நீ அறிந்தால் இதனை என்னை விட்டு அகற்றிடுவாயாக. இதனை விட்டு என்னையும் திருப்பிடுவாயாக. மேலும் எனது விதியில் நன்மையைச் சேர்ப்பாயக. அது எங்கிருந்தாலும் சரியே. பிறகு அதில் எனக்குத் திருப்தி ஏற்படுத்தித் தருவாயாக.)

**29. பஜ்ரு தொழுது விட்டு சூரியன் உதிக்கும் வரை பள்ளியில் அமர்ந்திருத்தல்:** நபி (ஸல்) அவர்கள் பஜ்ரு தொழுததும் சூரியன் நன்கு உதயமாகும் வரை தொழுத

இடத்திலேயே அமர்ந்திருப்பார்கள். அறிவிப்பவர்: ஜாபிர் பின் ஸமுரா (ரலி), நூல்: முஸ்லிம்-670

**30. ஜு ம்ஆவுக்காகக் குளித்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “உங்களில் ஒருவர் ஜும்ஆவுக்கு வருவதாக இருந்தால் குளித்துக் கொள்ளட்டும்.” அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: புகாரி-877, முஸ்லிம்-846

**31. ஜும்ஆவுக்கு முன்னேரத்தில் வருதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஜும்ஆ நாள் வந்து விட்டால் வானவர்கள் பள்ளியின் நுழைவாயிலில் நின்று கொண்டு முதலில் வருபவரையும் அதைத் தொடர்ந்து வருபவர் களையும் வரிசைப்படி பதிவு செய்கிறார்கள். முதலில் வருபவர் ஒட்டகத்தைக் குர்பானி கொடுத்தவர் போலவும் அதற்கடுத்து வருபவர் மாட்டைக் குர்பானி கொடுத்த வரைப் போலவும் அதன் பிறகு ஆடு பிறகு கோழி பிறகு முட்டை ஆகியவற்றைக் குர்பானி கொடுத்தவர் போலவுமாவார்கள். இமாம் வந்து விட்டால் வானவர்கள் தங்கள் ஏடுகளைச் சுருட்டிவிட்டு சொற்பொழிவைக் கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-929, முஸ்லிம்-850

**32. ஜும்ஆ நாளில் உள்ள சிறப்பான நேரத்தைத் தேடிக் கொள்ளுதல்:** நபி (ஸல்) அவர்கள் ஜும்ஆ நாளைப் பற்றிக் குறிப்பிடும் போது “ஜும்ஆ நாளில் ஒரு நேரம் உண்டு. அந்த நேரத்தில் ஒரு முஸ்லிமான அடியார்

தொழுகையில் நின்று அல்லாஹ்விடம் எதையேனும் கேட்டால் அதை அல்லாஹ் அவருக்குக் கொடுக்காமல் இருப்பதில்லை" என்று கூறிவிட்டு "அந்த நேரம் கொஞ்ச நேரம் தான் என்பதைத் தமது கையால் சைகை செய்து காட்டினார்கள்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-935, முஸ்லிம்-852

**33. பெருநாள் தொழுது விட்டுத் திரும்போது வேறு பாதையில் வருதல்:** "பெருநாள் வந்து விட்டால் நபி (ஸல்) அவர்கள் (போவதற்கும் வருவதற்கும்) பாதையை மாற்றிக் கொள்வார்கள்." அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி), நூல்: புகாரி-986

**34. ஜனாஸாத் தொழுகையில் பங்கேற்றல்:** ஜனாஸாவில் அதற்குத் தொழுகை நடத்தப்படும் வரை "யார் கலந்து கொள்கிறாரோ அவருக்கு ஒரு கீராத் அளவு நன்மை உண்டு. அடக்கம் செய்யப்படும் வரை யார் கலந்து கொள்கிறாரோ அவருக்கு இரண்டு கீராத் அளவு நன்மை உண்டு" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது 'இரண்டு கீராத் என்றால் என்ன?' என (நபி (ஸல்) அவர்களிடம்) கேட்கப்பட்டது. அதற்கவர்கள், மிகப் பெரிய இரண்டு மலையளவு" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-645

**35. கப்ருகளை ஸியாரத் செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கப்ருகளை ஸியாரத் செய்வதை விட்டும்

உங்களை நான் தடுத்திருந்தேன். (இப்போது கூறுகிறேன்:) அவற்றை ஸியாரத் செய்யுங்கள்." அறிவிப்பவர்: புரைதா (ரலி), நூல்: முஸ்லிம்-977

**குறிப்பு:** பெண்கள் ஸியாரத் செய்வதை நபி (ஸல்) தடைசெய்துள்ளார்கள். சவூதி அறிஞர் இப்னு பாஸ் அவர்களும் பெரும்பாலான அறிஞர்களும் இவ்வாறே தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

## நோன்பின் ஒழுங்குகள்

**36. ஸஹர் செய்தல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "ஸஹர் செய்யுங்கள். திண்ணமாக ஸஹர் உணவில் பரகத் உள்ளது." அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: புகாரி-1923, முஸ்லிம்-1095

**37. விரைந்து நோன்பு துறத்தல்:** அதாவது சூரியன் மறைந்து விட்டதென உறுதியாகி விட்டால் நோன்பு துறந்திட வேண்டும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "விரைந்து நோன்பு துறக்கும் வரை மக்கள் நன்மை யிலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள்." அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஅத் (ரலி), (புகாரி-1957, முஸ்லிம்-1098)

**38. ரமழான் இரவுத் தொழுகை:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நம்பிக்கையுடனும் நற்கூலி கிடைக்கும் எண்ணத்துடனும் யார் ரமழானில் இரவு தொழுகிறாரோ

அவருடைய முன்பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), (புகாரி-37, முஸ்லிம்-759)

**39. ரமழானில் இஃதிகாப் இருத்தல்:** "நபி(ஸல்)அவர்கள் ரமழானின் கடைசி பத்தில் இ்.திகாப் இருப்பார்கள்." அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: புகாரி-2025

**40. ஷவ்வாலில் ஆறு நாட்கள் நோன்பு நோற்றல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் ரமழானில் நோன்பு நோற்ற பின் அதைத் தொடர்ந்து ஷவ்வாலிலும் ஆறு நோன்புகள் நோற்றாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு நோற்றவராவார். அறிவிப்பவர்: அபூ அய்யூப் (ரலி), நூல்: முஸ்லிம்-1162

**41. ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்றல்:** அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்: "என் நண்பர் எனக்கு மூன்று வி'யங்களை அறிவுறுத்தினார். நான் மரணிக்கும் வரை அவற்றை விட மாட்டேன். அவை, ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது, லுஹா தொழுவது, தூங்கும் முன் வித்ரைத் தொழுதுவிடுவது ஆகியவையாகும். நூல்: புகாரி-1178, முஸ்லிம்-721

**42. அரபா நாளில் நோன்பு நோற்றல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "அரபா நாளில் நோன்பு நோற்பதால் அதற்கு முந்தைய மற்றும் பிந்தைய வருடத்திற்குரிய பாவங்களை

அல்லாஹ் மன்னித்தருள்வான் என்றே எதிர்பார்க்கிறேன். அறிவிப்பவர்: அபூகதாதா (ரலி), நூல்: முஸ்லிம்-1162

**43. ஆஷூரா தினத்தில் நோன்பு நேற்றல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பதால் அதற்கு முந்தைய வருடத்திற்குரிய பாவங்களை அல்லாஹ் மன்னித்தருள்வான் என்றே எதிர்பார்க்கிறேன்." அறிவிப்பவர்: அபூகதாதா (ரலி), நூல்: முஸ்லிம்-1162

## பயணத்தின் ஒழுங்குகள்

**44. பயணத்தின் போது தலைவரைத் தேர்ந்தெடுத்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மூவர் பயணம் மேற் கொண்டால் அவர்களில் ஒருவரை அவர்கள் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்." அறிவிப்பவர்: ஆபூஸயீத், அபூஹுரைரா (ரலி), நூல்: அபூதாவூத்-2608

**45. உயரமான இடத்தில் ஏறும்போது அல்லாஹு அக்பர் என்றும் தாழ்வான இடத்தில் இறங்கும்போது சுப்ஹானல்லா என்றும் கூறுதல்:** "நாங்கள் (மேட்டில்) ஏறும்போது 'அல்லாஹு அக்பர்' என்றும் (பள்ளத்தாக்கில்) இறங்கும் போது 'சுப்ஹானல்லாஹ்' என்றும் கூறுவோம்." அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி), நூல்: புகாரி-2993

**46. ஏதேனும் ஓர் இடத்தில் இறங்கும்போது ஓத வேண்டிய துஆ:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"ஒருவர் ஏதேனும் ஓர் இடத்தில் இறங்கி பின்பு '**அவூது பிகலிமாத்தில்லாஹித் தாம்மாத்தி மின் ஷர்ரி மா கலக்'** எனக் கூறினால் அவர் அவ்விடத்திலிருந்து செல்லும் வரை அவருக்கு எந்த இடையூறும் ஏற்படாது. அறிவிப்பவர்: கவ்லா பின்த் ஹகீம் (ரலி), நூல்: முஸ்லிம்-2708

أَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

(பொருள்: அல்லாஹ்வின் பரிபூரணமான வார்த்தை களைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாவல் தேடுகிறேன்.)

**47. பயணத்திலிருந்து திரும்பியதும் பள்ளிக்கு வந்து தொழுதல்:** "நபி (ஸல்) அவர்கள் பயணத்திலிருந்து திரும்பினால் முதலில் பள்ளிக்கு வந்து இரண்டு ரக்அத் தொழுவார்கள்." அறிவிப்பவர்: கஅப் இப்னு மாலிக் (ரலி), நூல்: புகாரி-3088, முஸ்லிம்-716

## உண்ணல், உடுத்தலின் ஒழுங்குகள்

**48. புத்தாடை அணியும்போது ஓத வேண்டிய துஆ:** "நபி (ஸல்) அவர்கள் புத்தாடை அணியும்போது **"அல்லாஹு"ம்ம லகல் ஹம்து, அன்த கஸவ்தனீஹி அஸ்அலுக மின் கைரிஹி வகைரிமா ஸு"னிஅ லஹு" வஅவூதுபிக மின் ஷர்ரிஹி வஷர்ரிமா ஸு"னிஅ லஹு"**

என்று கூறுவார்கள்." அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி), நூல்: அபூதாவூத்-4020

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ أَنْتَ كَسَوْتَنِيْهِ أَسْأَلُكَ مِنْ خَيْرِهِ وَخَيْرِ مَا صُنِعَ لَهُ
وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّهِ وَشَرِّ مَا صُنِعَ لَهُ

(பொருள்: இறைவா! உனக்கே புகழ் அனைத்தும். நீ தான் எனக்கு இதை (இந்த இடத்தில் சட்டை, தலைப்பாகை என அதன் பெரைக் குறிப்பிடுவார்கள்.) அணிவித்தாய். இதன் நன்மையையும் எந்த நோக்கத் திற்காக இது தயாரிக்கப்பட்டதோ அந்த நன்மையையும் உன்னிடம் வேண்டுகிறேன். அதன் தீமையை விட்டும் இது தயாரிக்கப்பட்டதில் உள்ள தீமையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்)

**49. செருப்பணியும்போது வலது காலை முற்படுத்துதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் எவரேனும் செருப்பணிந்தால் முதலில் வலது காலில் அணியட்டும். கழற்றும்போது முதலில் இடதுகாலிலிருந்து கழற்றட்டும். இரண்டையுமே அணியட்டும் அல்லது இரண்டையுமே கழற்றி விடட்டும்.(ஒரு செருப்புடன் நடக்க வேண்டாம்.)" அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-5855, முஸ்லிம்-2097

**50. சாப்பிடும்போது பிஸ்மி சொல்லுதல்:** அம்ரு பின் ஸலமா(ரலி) அறிவிப்பதாவது: நான் நபி (ஸல்) அவர்கள்

மடியில் (சிறுவனாக) இருந்தேன். என்னுடைய கை சாப்பாட்டுத் தட்டில் இங்கும் அங்கும்மாகச் சென்றது. அப்போது நபி(ஸல்)அவர்கள் "குழந்தாய்! பிஸ்மில்லாஹ் சொல்லி உனது வலது கையால் சாப்பிடு; தட்டின் ஓரத்திலிருந்து சாப்பிடு" என்று கூறினார்கள். நூல்: புகாரி-5376, முஸ்லிம்-2022

**51. உண்ட பின் அல்லது குடித்த பின் அல்லாஹ்வைப் புகழ்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எதையேனும் சாப்பிட்டு விட்டு அல்லது குடித்து விட்டு அதற்காக அல்லாஹ்வைப் புகழ்கின்ற அடியானை அல்லாஹ் திருப்தியுறுகிறான்." அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: முஸ்லிம்-2734

**52. உட்கார்ந்து கொண்டு குடித்தல்:** "ஒரு மனிதன் நின்று கொண்டு அருந்துவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்." அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: முஸ்லிம்-2024

**53. பால் அருந்தி விட்டு வாய்க் கொப்பளித்தல்:** "நபி (ஸல்) அவர்கள் பால் அருந்தி விட்டு வாய்க் கொப்பளித்தார்கள். 'அதில் கொழுப்பு இருக்கிறது' என்றும் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: புகாரி-211, முஸ்லிம்-385

**54. உணவைக் குறை கூறல்:** "நபி(ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒரு போதும் குறை கூறியது

கிடையாது. விரும்பினால் உண்பார்கள். இல்லையெனில் விட்டு விடுவார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-5409, முஸ்லிம்-2064

**55. மூன்று விரல்களால் உண்பது:** “நபி(ஸல்) அவர்கள் மூன்று விரல்களால் சாப்பிடுவார்கள். தமது கையைத் துடைப்பதற்கு முன் அதனைச் சூப்புவார்கள்.” அறிவிப்பவர்: கஅப் இப்னு உஜ்ரா(ரலி), (முஸ்லிம்-2032)

**56. ஸம் ஸம் நீரைக் குடித்தல், அதன் மூலம் நோய் நிவாரணம் தேடுதல்:** ஸம் ஸம் தண்ணீரைப் பற்றி நபி (ஸல்) பின்வருமாறு கூறினார்கள்: “இந்த நீர் அருள்வள மிக்கதாகவும் நல்ல உணவாகவும் இருக்கிறது.” அறிவிப்பவர்: ஆபூதர் (ரலி), நூல்: முஸ்லிம்-2473 “இது நோய்க்கு நிவாரணமாகவும் உள்ளது” என்ற கூடுதல் தகவலுடன் தயாலிஸியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**57. நோன்புப் பெருநாளில் தொழுகைக்குப் புறப்படும் முன் சாப்பிடுதல்:** “நபி(ஸல்) அவர்கள் சில பேரீச்சம் பழங்களைச் சாப்பிடாமல் நோன்புப் பெருநாளில் தொழப் புறப்பட மாட்டார்கள்.” மற்றொரு அறிவிப்பில் “அவற்றை ஒற்றைப்படையில் சாப்பிடுவார்கள்” என்று வந்துள்ளது. அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: புகாரி-953

## திக்ர், துஆ

**58. திருக்குர்ஆனை அதிகம் ஓதுதல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "திருக்குர்ஆனை ஓதுங்கள். மறுமையில் அதனை ஓதியவர்களுக்கு அது பரிந்துரை செய்யக்கூடியதாக வரும்." அறிவிப்பவர்: அபூ உமாமா (ரலி), நூல்: முஸ்லிம்-804

**59. திருக்குர்ஆனை அழகிய ராகத்தில் ஓதுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "குர்ஆனை சப்தமிட்டு அழகிய ராகத்துடன் நபியவர்கள் ஓதியதை அல்லாஹ் செவியேற்றதைப்போல் வேறு எதையும் அவன் செவியேற்றதில்லை. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-7544, முஸ்லிம்-792

**60. எல்லா நிலையிலும் அல்லாஹ்வை நினைவுகூரல்:** நபி (ஸல்) அவர்கள் எல்லா நிலையிலும் அல்லாஹ்வை நினைவுகூருவார்கள் என ஆயஷா (ரலி), அவர்கள் அறிவிக்கிறார்கள். ((முஸ்லிம்-373)

**61. தஸ்பீஹ் செய்தல்:** (ஒரு முறை) நபி (ஸல்) அவர்கள் சுப்ஹுத் தொழுது விட்டு (தமது மனைவி) ஜுவைரிய்யா (ரலி) விடமிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். ஜுவைரிய்யா (ரலி) தமது தொழுமிடத்தில் இருந்தார்கள். பிறகு நண்பகல் நேரத்தில் நபியவர்கள் திரும்பி வந்ததும் ஜுவைரிய்யா (ரலி) தமது தொழுமிடத்திலேயே

அமர்ந்து கொண்டிருந்ததைக் கண்டு, "நான் உன்னை விட்டுப் பிரிந்து சென்றதிலிருந்து இதே நிலையில் தான் இருக்கிறாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் 'ஆம்' என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உனக்குப் பின் நான்கு வார்த்தைகளை நான் மூன்று முறை கூறினேன். இது வரை நீ கூறிக்கொண்டிருந்த தையும் நான் கூறியதையும் நிறுத்துப் பார்த்தால் நான் கூறியவை கனமானவையாக இருக்கும். அந்த நான்கு வார்த்தைகள்: **சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி அதத கல்கிஹி வரிளா ந.்.ப்ஸிஹி வஸினத அர்ஷிஹி வமிதாத கலிமாத்திஹி**" அறிவிப்பவர்: ஜுவைரிய்யா (ரலி), நூல்: முஸ்லிம்-2726

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ عَدَدَ خَلْقِهِ وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ

(**பொருள்:** அல்லாஹ்வைப் புகழ்வதுடன் தூயவன் என துதிக்கவும் செய்கிறேன். அவனது படைப்பினங்களின் எண்ணிக்கை அளவிற்கும், அவனது மனதின் திருப்திக்கு ஏற்றவாறும், அவனது அர்ஷின் எடை அளவிற்கும் அவனது கட்டளைகளின் மை அளவிற்கும் அவனைத் துதிக்கிறேன்.)

**62. தும்மியவருக்கு பதில் கூறுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் தும்மினால் "**அல்ஹம்து லில்லாஹ்**" என்று கூறட்டும். அதைக் கேட்டவர் "யர்ஹமு

**கல்லாஹ்"** என்று கூறட்டும். **"யர்ஹமுகல்லாஹ்"** என்று கூறியதை தும்மியவர் செவியேற்றால் அவர் **"யஹ்தீகு முல்லாஹ் வயுஸ்லிஹு பாலகும்"** என்று கூறட்டும்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-6224

اَلْحَمْدُ لِلّٰهِ ، يَرْحَمُكَ اللهُ ، يَهْدِيْكُمُ اللهُ وَيُصْلِحُ بَالَكُمْ

(**இதன் பொருள் முறையே:** எல்லாப் புகழும் அல்லாஹ் வுக்கே!, அல்லாஹ் உனக்கு அருள் புரியட்டும்!, அல்லாஹ் உனக்கு நேர்வழி காட்டி, உனது நிலையை சீர்படுத்தட்டும்!)

**63. நோயாளிக்காக பிரார்த்தித்தல்:** நபி(ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடம் நோய் விசாரிக்கச் சென்றார்கள். அப்போது **"லா ப.:.ஸ தஹுருன் இன்ஷா அல்லாஹ்"** என்று கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: புகாரி-5662 (**பொருள்:** பரவாயில்லை. இன்ஷா அல்லாஹ் குணமாகிவிடும்.) لاَ بَأْسَ طَهُوْرٌ إِنْ شَاءَ اللهُ

**64. வலி ஏற்பட்ட இடத்தில் கை வைத்து துஆ ஓதுதல்:** உஸ்மான் பின் அபில் ஆஸ் (ரலி), அவர்கள் தாம் இஸ்லாத்தை ஏற்றது முதல் தமது உடம்பில் வலி இருப்பதை நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், உமது உடம்பில் வலி உள்ள இடத்தில் கை வைத்து, மூன்று தடவை "பிஸ்மில்லாஹ்" கூறி, "அவூது பில்லாஹி வகுத்ரதிஹி

மின் ஷர்ரி மா அஜிது வஉஹாதிர்" என்று ஏழு முறை கூறும் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உஸ்மான்· பின் அபில் ஆஸ் (ரலி), நூல்: முஸ்லிம்-2202

أَعُوْذُ بِاللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَأُحَاذِرُ

(**பொருள்:** அல்லாஹ்வைக் கொண்டும் அவனது ஆற்றலைக் கொண்டும் நான் உணர்கிற அஞ்சுகிற தீமையை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.)

**65. சேவல் கூவும் போது துஆ செய்தல், கழுதை கத்தும் போது அவூது சொல்லுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சேவல் கூவுவதை நீங்கள் செவியேற்றால் அல்லாஹ்விடம் அவனது அருளை வேண்டுங்கள். ஏனெனில் அது மலக்கைப் பார்த்து விட்டது. கழுதை கத்துவதைக் கேட்டால் ஷைத்தானிடமிருந்து அல்லாஹ் விடம் பாதுகாப்புத் தேடுங்கள். ஏனெனில் அது ஷைத்தானைப் பார்த்து விட்டது. அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-3303, முஸ்லிம்-2729

66. **மழை பொழியும் போது துஆ செய்தல்:** நபி(ஸல்) அவர்கள், மழை பொழியக் கண்டால் "அல்லாஹும்ம ஸய்யிபன் நா.'.பிஆ" என்று கூறுவார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-1032

(**பொருள்:** இறைவா! பயனுள்ள மழையைப் பொழியச் செய்வாயாக!) اَللّٰهُمَّ صَيِّبًا نَافِعًا

**67. வீட்டில் நுழையும்போது அல்லாஹ்வை நினைவு கூறல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒருவர் தனது வீட்டில் நுழைந்தால், நுழையும் போதும், உண்ணும் போதும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால் ஷைத்தான் (தனது சஹாக்களிடம்) 'இந்த வீட்டில் உங்களுக்கு இரவு தங்குதலோ இரவுச் சாப்பாடோ கிடையாது' எனக் கூறுவான். வீட்டில் நுழையும்போது அவர் அல்லாஹ்வை நினைவு கூரவில்லையெனில் 'இந்த வீட்டில் தங்கும் வாய்ப்பைப் பெற்றுவிட்டீர்கள்' என்றும் உண்ணும்போது அவர் அல்லாஹ்வை நினைவுகூரவில்லையெனில், 'இந்த வீட்டில் தங்கும் வாய்ப்பையும் உண்ணும் வாய்ப்பையும் பெற்றுவிட்டீர்கள்' என்றும் (தன்னுடைய சஹாக்களிடம்) ஷைத்தான் கூறுவான்." அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி), நூல்: முஸ்லிம்-2018

**68. சபையில் அல்லாஹ்வை நினைவு கூறல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கள் ஒரு சபையில் அமர்ந்து விட்டு அல்லாஹ்வை நினைவு கூறவில்லையெனில் தங்கள் நபியின் மீதும் ஸலவாத்துச் சொல்லவில்லை யெனில் அவர்கள் கைசேதம் அடைவார்கள். நாடினால் அல்லாஹ் அவர்களைத் தண்டிப்பான். நாடினால் அவர்களை மன்னிப்பான். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: திர்மிதி-3380

**69. கழிப்பறையில் நுழையும்போது துஆ ஓதுதல்:** நபி (ஸல்) கழிவறையில் நுழையும்போது **“அல்லாஹும்ம இன்னீ அவூதுபிக மினல் குப்ஸி வல்கபாயிஸ”** என்று கூறுவார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: புகாரி-6322, முஸ்லிம்-375

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْخُبْثِ وَالْخَبَائِثِ

(**பொருள்:** இறைவா! ஆண், பெண் ஷைத்தான்களை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)

**70. காற்று பலமாக வீசும்போது துஆ செய்தல்:** காற்று பலமாக வீசும்போது நபி (ஸல்) அவர்கள் **“அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக** கைரஹா வகைரமா ஃபீஹா, வகைரமா உர்ஸிலத் பிஹி வஅவூதுபிக மின் ஷர்ரிஹா வஷர்ரிமா ஃபீஹா வஷர்ரிமா உர்ஸிலத் பிஹி” என்று கூறுவார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), ((முஸ்லிம்-899)

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ خَيْرَهَا وَخَيْرَ مَا فِيْهَا وَخَيْرَ مَا أُرْسِلَتْ بِهِ وَأَعُوْذُ بِكَ مِنْ شَرِّهَاوَشَرِّ مَا فِيْهَا وَشَرِّ مَا أُرْسِلَتْ بِهِ

(**பொருள்:** இறைவா! இந்தக் காற்றின் நன்மையையும் இந்தக் காற்றில் இருக்கின்ற நன்மையையும் இந்தக் காற்று எதற்காக அனுப்பப்பட்டுள்ளதோ அதன் நன்மையையும் உன்னிடம் இறைஞ்சுகிறேன். மேலும் இதன் தீமையை விட்டும் இதிலுள்ள தீமையை விட்டும் இது

எதற்காக அனுப்பப்பட்டுள்ளதோ அதன் தீமையைவிட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)

**71. முஸ்லிம்களுக்காக மறைவிலிருந்து துஆச் செய்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யாரேனும் தமது சகோதரனுக்காக மறைவிலிருந்து துஆச் செய்தால் அவருக்காகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட வானவர் ஆமீன் கூறிவிட்டு 'உனக்கும் அதுபோல் கிடைக்கட்டும்' என்று கூறுவார்." அறிவிப்பவர்: அபுத்தர்தா (ரலி), நூல்: முஸ்லிம்-2732

72. துன்பம் நேரும்போது துஆச் செய்தல்: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு முஸ்லிமுக்குத் துன்பம் நேர்ந்தால் அல்லாஹ் அவருக்கு ஏவியபடி **'இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன், அல்லாஹும்ம அஜிர்னீ ∴பீ முஸீபதீ வஅக்லி∴ப்லீ கைரன் மின்ஹா'** என்று கூறினால் அல்லாஹ் அதற்குப் பகரமாக அதைவிடச் சிறந்ததை அவருக்குத் தருவான்." அறிவிப்பவர்: உம்மு ஸலமா (ரலி), நூல்: முஸ்லிம்-918

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ اَللّٰهُمَّ أجِرْنِيْ فِيْ مُصِيْبَتِيْ وَأَخْلِفْ لِيْ خَيْرًا مِنْهَا

(**பொருள்:** நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள். அவன் பக்கமே திரும்பச் செல்லக்கூடியவர்களாவோம். இறைவா! எனது துன்பத்தில் எனக்குக் கூலி வழங்குவாயாக!

மேலும் இதற்குப் பகரமாக இதனினும் சிறந்ததை வழங்குவாயாக.)

**73. ஸலாமைப் பரவலாக்குதல்:** "நபி (ஸல்) அவர்கள் ஏழு காரியங்களை எங்களுக்கு ஏவினார்கள். ஏழு காரியங்களை விட்டும் எங்களைத் தடுத்தார்கள். நோயாளியை நோய் விசாரிக்கவும்,... ஸலாமைப் பரவலாக்கவும் ஏவினார்கள்... அறிவிப்பவர்: பராஉ பின் ஆஸிப் (ரலி), நூல்: புகாரி-5175, முஸ்லிம்-2066

## இன்னும் பல நபிவழிகள்

**74. கல்வியைத் தேடுதல்:** "கல்வியைத் தேடும் பாதையில் செல்பவருக்கு அல்லாஹ் சொர்க்கத்திற்குச் செல்லும் பாதையை இலகுவாக்கித் தருவான்." என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2699

**75. வீட்டினுள் நுழையும் முன் மூன்று முறை அனுமதி கோரல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வீட்டில் நுழைவதற்கு மூன்று முறை அனுமதி கோர வேண்டும். உனக்கு அனுமதி வழங்கப்பட்டால் உள்ளே செல். இல்லையெனில் திரும்பி விடு. அறிவிப்பவர்: அபூமூஸா (ரலி), நூல்: புகாரி-6245, முஸ்லிம்-2153

**76. பிறந்த குழந்தைக்குத் தஹ்னீக் செய்தல்:** "எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதனை நபி(ஸல்)அவர்களிடம்

கொண்டு வந்தேன். அவர்கள் அதற்கு இப்ராஹீம் என்று பெயர் வைத்து ஒரு பேரீத்தம் பழத்தைக் கொண்டு தஹ்னீக் செய்தார்கள். அக்குழந்தைக்குப் பரகத்தை வேண்டிப் பிரார்த்தித்தார்கள்." அறிவிப்பவர்: அபூமூஸா (ரலி), நூல்: புகாரி-5467, முஸ்லிம்-2145

(தஹ்னீக் என்றால் இனிப்பான உணவை மென்று குழந்தையின் வாயில் கொடுப்பது. பேரீத்தம் பழத்தைக் கொண்டு தஹ்னீக் செய்வது சிறந்ததாகும்.)

**77. பிறந்த குழந்தைக்காக அகீகா கொடுத்தல்:** பெண் குழந்தைக்கு ஒரு ஆடும் ஆண் குழந்தைக்கு இரண்டு ஆடுகளும் அகீகா கொடுக்க வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்: அஹ்மத்

**78. மழை பொழியும்போது சிறிது நனைந்து கொள்ளுதல்:** நாங்கள் நபி (ஸல்) அவர்கள் இருக்கும் போது எங்களுக்கு மழை பொழிந்தது. அப்போது அவர்கள் தமது ஆடையைச் சற்று அகற்றி தமது மேனியில் சிறிது நனைத்துக் கொண்டார்கள். நாங்கள் கேட்டோம்: 'அல்லாஹ்வின் தூதரே! ஏன் இப்படிச் செய்தீர்கள்? என்று' அதற்கவர்கள், "இது அதன் இறைவன் புறத்திலிருந்து புதிதாக வந்துள்ளது" எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: முஸ்லிம்-898

**79. நோயாளியை நோய் விசாரித்தல்:** "நோயாளியை நோய் விசாரிப்பவர் திரும்பிவரும் வரை சொர்க்கத்தின் கனிகளிலேயே இருப்பார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸவ்பான் (ரலி), முஸ்லிம்-2568

**80. புன்னகை காட்டுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உனது சகோதரனை மலர்ந்த முகத்துடன் பார்ப்பது உட்பட எந்த நல்லறத்தையும் நீ அற்பமாக எண்ணிவிடாதே!" அறிவிப்பவர்: அபூதர் (ரலி), நூல்: முஸ்லிம்-2626

**81. ஒரு சகோதரனை அல்லாஹ்வுக்காக சந்தித்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதர் வேறொரு ஊரில் உள்ள தனது சகோதரனை சந்திக்கச் சென்றார். வழியில் அவரை எதிர்பார்த்திருக்கும்படி ஒரு வானவரை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அந்த மனிதர் அந்த வானவரிடம் வந்தபோது 'எங்கே செல்கிறாய்?' என்று அந்த வானவர் கேட்டார். அதற்கு அந்த மனிதர், 'இந்த ஊரில் எனது சகோதரன் இருக்கிறார். அவரைப் பார்க்கச் செல்கிறேன்' என்றார். 'அவர் உனக்கு ஏதேனும் உபகாரம் செய்திருக்கிறாரா?' என்று வானவர் கேட்க, அந்த மனிதர், 'இல்லை! ஆனாலும் நான் அவரை அல்லாஹ்வுக்காக நேசிக்கிறேன்' என்றார். உடனே அந்த வானவர், 'நான் அல்லாஹ்வின் புறத்திலிருந்து உன்னிடம் வந்த தூதராவேன். நீ அல்லாஹ்வுக்காக அவரை நேசித்தது

போல் அல்லாஹ்வும் உன்னை நேசித்து விட்டான்' என்று கூறினார்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2567

**82. நேசத்தை வெளிப்படுத்துதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் தனது சகோதரனை நேசித்தால் தான் நேசிப்பதை அவனுக்குத் தெரியப் படுத்தட்டும்." அறிவிப்பவர்: மிக்தாத் பின் மஅதிய கரிப் (ரலி), நூல்: அஹ்மத், அபூதாவூத்-5124

**83. கொட்டாவி வருவதைத் தடுத்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கொட்டாவி ஷைத்தான் புறத்தி லிருந்து ஏற்படுகிறது. உங்களில் யாரேனும் கொட்டாவி விட நேர்ந்தால் இயன்ற வரை அது வராமல் தடுக்கட்டும். ஏனெனில் "ஹா..." என்று அவர் கூறும்போது ஷைத்தான் சிரிக்கிறான்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-3289, முஸ்லிம்-2994

**84. மனிதர்கள் மீது நல்லெண்ணம் கொள்ளுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "சந்தேகம் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் சந்தேகம் தான் மிகப் பொய்யான பேச்சாகும்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-6066, முஸ்லிம்-2562

**85. வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவுதல்:** 'நபி (ஸல்) அவர்கள் தமது வீட்டில் என்ன செய்வார்கள்?' என்று நான் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டேன்.

அதற்கவர்கள், “வீட்டு வேலைகளில் தமது மனவிக்கு உதவுவார்கள். தொழுகைக்குரிய நேரம் வந்து விட்டால் தொழுகைக்குப் புறப்பட்டுவிடுவார்கள்” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அஸ்வத் (ரலி), நூல்: புகாரி-676

**86. இயற்கையான சுன்னத்துகள்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இயற்கையான சுன்னத்துகள் ஐந்தாகும். அவை கத்னா செய்தல், மர்மஸ்தானத்தின் முடியை அகற்றுதல், அக்குள் முடியைப் பிடுங்குதல், நகங்களை வெட்டுதல், மீசையைக் கத்தரித்தல் ஆகியனவாகும்.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-5889, முஸ்லிம்-257

**87. அநாதையைப் பராமரித்தல்:** நபி (ஸல்) அவர்கள் தமது ஆட்காட்டி விரல், நடுவிரல் ஆகிய இரண்டு விரல் களால் சுட்டிக்காட்டி, “நானும் அநாதையைப் பராமரிப் பவரும் சொர்க்கத்தில் இவ்வாறு இருப்போம்” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஅத் (ரலி), நூல்: புகாரி-6005

**88. கோபம் தவிர்த்தல்:** ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் ‘எனக்கு அறிவுரை கூறுங்கள்’ எனக் கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “கோபம் கொள்ளாதே!” என்று கூறினார்கள். அவர் திரும்பத் திரும்ப கேட்கவும் நபி (ஸல்) அவர்களும், “கோபம்

கொள்ளாதே!" என்றே கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-6116

**89. அல்லாஹ்வின் அச்சத்தால் அழுதல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தனது நிழலைத் தவிர வேறு நிழல் இல்லாத (அந்த மறுமை) நாளில் அல்லாஹ் ஏழு பேர்களுக்கு நிழலைக் கொடுப்பான்... ஒரு மனிதர், தனிமையில் அல்லாஹ்வை நினைத்து கண்ணீரைச் சிந்தினார். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-660, முஸ்லிம்-1031

**90. நிலையான தர்மம்:** நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: "நிலையான தர்மம், பயனளிக்கும் கல்வி, தனக்காப் பிரார்த்தனை செய்யும் நல்லொழுக்கமுள்ள பிள்ளை ஆகிய மூன்றையும் தவிர மற்ற செயல்பாடுகள் யாவும் மனிதன் மரணித்ததும் முடிவுக்கு வருகின்றன." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-1631

**91. பள்ளிவாசல் கட்டுதல்:** நபி(ஸல்) அவர்களின் பள்ளியை உஸ்மான் (ரலி), அவர்கள் விரிவுபடுத்திய போது, "நீங்கள் மிகவும் விரிவுபடுத்தி விட்டீர்கள்" என்று மக்கள் அவர்களிடம் ஆட்சேபணை செய்தார்கள். அப்போது உஸ்மான் (ரலி), அவர்கள், "அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி யார் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டுகிறாரோ அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தில் அதுபோன்ற ஒன்றைக் கட்டுகிறான் என நபி (ஸல்)

அவர்கள் கூறக் கேட்டுள்ளேன்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உஸ்மான் (ரலி), (புகாரி-450, முஸ்லிம்-533)

**92. கொடுக்கல் வாங்கலில் தாரளமாக நடந்து கொள்ளல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "விற்கும் போதும் வாங்கும்போதும் கடனைத் திருப்பிக் கேட்கும் போதும் தாராளமாக நடந்து கொள்ளும் மனிதனுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!" அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரி-2076

**93. பாதையில் கிடக்கும் தொல்லை தரும் பொருளை அகற்றுதல்:** நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "ஒரு மனிதா பாதையில் நடந்து கொண்டிருக்கும்போது முட்கிளை ஒன்றைக் கண்டு அதனை அப்புறப்படுத்தினார். அவரது நன்றியுணர்வை அல்லாஹ் ஏற்று அவரை மன்னித்தான்." அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-2472, முஸ்லிம்-1914

**94. தர்மம் செய்தல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் தூய்மையானதைத் தவிர வேறு எதையும் ஏற்க மாட்டான் என்பதால் தூய்மையான சம்பாத்தியத் திலிருந்து ஒரு பேரீத்தம்பழம் அளவு யார் தர்மம் செய்கிறாரோ அதனை அல்லாஹ் தனது வலக்கரத்தால் வாங்கிக் கொள்கிறான். பிறகு உங்களில் ஒருவர் தனது குதிரைக் குட்டியை வளர்ப்பதுபோல அதை அல்லாஹ் தர்மம் செய்தவருக்காக வளர்க்கிறான். மலையைப்

போல் அது பெரிதாகின்ற வரை.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி-1410, முஸ்லிம்-1014

**95. துல்ஹஜ் பத்து நாட்களில் நற்செயல்கள் அதிகம் செய்தல்:** “ஏனைய நாட்களில் செய்கின்ற எந்த நல்லறமும் இந்த (துல்ஹஜ்) பத்து நாட்களில் செய்கின்ற நல்லறத்தை விடச் சிறந்ததல்ல” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ‘ஜிஹாதை விடவுமா?’ என்று தோழர்கள் கேட்டனர். “ஜிஹாதை விடவும் தான். ஆயினும் தன் உயிரையும் பொருளையும் பணயம் வைத்துப் புறப்பட்டு (அவ்விரண்டில்)எதையும் திரும்பக் கொண்டு வராத போராளியைத் தவிர” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), நூல்: புகாரி-969

**96. பல்லியைக் கொல்லுதல்:** நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “பல்லியை ஒரே அடியில் கொன்றவருக்கு நூறு நன்மைகள் எழுதப்படும். இரண்டு அடிகளில் கொன்றவருக்கு நூறை விடக் குறைவாகவும் மூன்று அடிகளில் கொன்றவருக்கு அதைவிடக் குறைவாகவும் நன்மைகள் எழுதப்படும்.” அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: முஸ்லிம்-2240

**97. செவியேற்பதையெல்லாம் சொல்வதைத் தவிர்த்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “தான் செவியேற்பதை யெல்லாம் சொல்வது ஒரு மனிதன் பொய்யன் என்பதற்கு

போதுமான சான்றாகும்.” அறிவிப்பவர்: ஹ.்.ப்ஸ் பின் ஆஸிம் (ரலி), நூல்: முஸ்லிம்-5

**98. குடும்பத்துக்குச் செலவு செய்வதில் நற்கூலியை எதிர்பார்த்தல்:** நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “ஒரு முஸ்லிம் நற்கூலியை எதிர்பார்த்து தனது குடும்பத்துக்கு செலவு செய்தால் அது அவனுக்குத் தர்மமாக அமையும்.” அறிவிப்பவர்: அபூ மஸ்வூத் (ரலி), நூல்: முஸ்லிம்-1002

**99. ஆரம்ப தவாபில் ஓடுதல்:** “நபி(ஸல்) அவர்கள் ஆரம்ப தவாப் செய்யும்போது மூன்று சுற்றுக்கள் தொங்கோட்டமாக ஓடியும் நான்கு சுற்றுக்கள் நடந்தும் சென்றார்கள்.” அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி), நூல்: புகாரி-1644, முஸ்லிம்-1261

தொங்கோட்டம் என்பது கால் எட்டுக்களை சுருக்கி வைத்து சற்று வேகமாக நடப்பதாகும். ஒரு முஸ்லிம் உம்ராவுக்காக அல்லது ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வந்தவுடன் செய்ய வேண்டிய முதல் தவாபில் முதல் மூன்று சுற்றுக்களில் இவ்வாறு தொங்கோட்டம் ஓட வேண்டும்.

**100. நற்செயல் குறைவாக இருப்பினும் தொடர்ந்து செய்தல்:** “நற்செயல்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானது எது?” என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “குறைவாக இருப்பினும்

தொடர்ந்து செய்வதே!” என்று பதிலளித்தார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), (புகாரி-6465, முஸ்லிம்-783)

எல்லாம் வல்ல அல்லாஹ் நம்முடைய நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடுபத்தினர் மற்றும் தோழர்கள் அனைவர் மீதும் அருளையும் சாந்தியையும் பொழிவானாக!